www.Padasalai.Net www.CBSEtips.in

# முதல் இடைப்பருவத் தேர்வு - 2022

## பத்தாம் வகுப்பு

பதிவ எண்: | | | | | | |

## தமிழ்

நேரம்: 1. 30 மணி மதிப்பெண்கள்: 50

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக:** 7×1=7

1. வேர்க்கடலை, மிளகாய் விதை, மாங்கொட்டை ஆகியவற்றைக் குறிக்கும் பயிர் வகை ..........
அ) குலை வகை ஆ) மணி வகை இ) கொழுந்து வகை ஈ) இலை வகை

2. 'கேட்டவர் மகிழப் பாடிய பாடல் இது' - தொடரில் இடம்பெற்றுள்ள தொழிற்பெயரும் வினையாலணையும் பெயரும் முறையே .........
அ) பாடிய : கேட்டவர் ஆ) பாடல் : பாடிய இ) கேட்டவர் : பாடிய ஈ) பாடல் : கேட்டவர்

3. பாரதியார் காற்றை "மயலுறுத்து" என அழைப்பதைக் குறிக்கும் சொற்றொடர் ...........
அ)மணம் வீசும் காற்றாய் நீ வா ஆ) மனதை மயங்கச் செய்யும் மணத்தோடு நீ வா
இ) மயிலாடும் காற்றாய் நீ வா ஈ) மகரந்தம் சுமந்து கொண்டு நீ வா

4. பெரிய மீசை சிரித்தார் - அடிக்கோடிட்ட சொல்லுக்கான தொகையின் வகை எது?
அ) பண்புத்தொகை ஆ) உவமைத்தொகை இ) அன்மொழித்தொகை ஈ) உம்மைத் தொகை

5. அறிஞருக்கு நூல், அறிஞரது நூல் ஆகிய சொற்றொடர்களில் பொருளை வேறுபடுத்தக் காரணமாக அமைவது .............
அ) வேற்றுமை உருபு ஆ) எழுவாய் இ) உவம உருபு ஈ) உரிச்சொல்

6. எய்துவர் எய்தாப் பழி - இக்குறளடிக்கு பொருந்தும் வாய்பாடு எது?
அ) கூவிளம், தேமா, மலர் ஆ) கூவிளம், புலிமா, நாள் இ) தேமா, புளிமா, காசு ஈ) புளிமா, தேமா, பிறப்பு

7. பரிபாடல் அடியில் 'விசும்பும் இசையும்' என்னும் தொடர் எதனைக் குறிக்கிறது?
அ) வானத்தையும் பாட்டையும் ஆ) வானத்தையும் புகழையும்
இ) வானத்தையும் பூமியையும் ஈ) வானத்தையும் பேரொலியையும்

**II. ஐந்து வினாவிற்கு குறுகிய விடையளி (14 ஆவது வினா கட்டாய வினா)** 5×2=10

8. தமிழ்நாட்டில் மட்டும் விளையும் சிறுகூலங்கள் யாவை?
9. தண்ணீர் குடி, தயிர்க்குடம் ஆகிய தொகை நிலைத் தொடர்களை விரித்து எழுதுக. தொடரில் அமைக்க.
10. விருந்தினரை மகிழ்வித்துக் கூறும் முகமன் சொற்களை எழுதுக.
11. நச்சப்படாதவன் செல்வம் - இத்தொடரில் கோடிட்ட சொல்லுக்கு பொருள் தருக.
12. உயிர்கள் உருவாகி வளர ஏற்ற சூழல் பூமியில் எவை எவையெனப் பரிபாடல் வழி அறிந்தவற்றைக் குறிப்பிடுக.
13. கெடுப்பார் இலானுங் கெடுபவர் யார்?
14. "விடல்" - என முடியும் குறட்பாவினை எழுதுக.

**III. மூன்று வினாவிற்கு மூன்று வரிகளில் விடையளி (18 வது வினா கட்டாய வினா) 3×3=9**

15. சோலைக்காற்றும் மின்விசிறிக் காற்றும் பேசிக்கொள்வது போல் ஓர் உரையாடல் அமைக்க.
16. வேலொடு நின்றான் இடு என்றது போலும்
கோலொடு நின்றான் இரவு - குறளில் பயின்று வ்ரும் அணியை விளக்குக.
17. "மாளாத காதல் நோயாளன் போல்" - என்னும் தொடரிலுள்ள உவமை சுட்டும் செய்தியை விளக்குக.
18. "வாளால்" எனத் தொடங்கும் பெருமாள் திருமொழி பாடலை அடிபிறழாமல் எழுதுக.

**IV. எவையேனும் மூன்றிற்கு விடையளி:** 3×2=6

19. *சந்தக் கவிதையில் உள்ள பிழைகளைத் திருத்துக:*
"தேனிலே ஊரிய செந்தமிழின் - சுவை
தேரும் சிலப்பதி காறமதை
ஊனிலே எம்முயிர் உல்லலவும் - நிதம்
ஓதி யுணர்ந்தின் புருவோமே"
20. *சொல்லைக் கண்டுபிடித்துப் புதிரை விடுவிக்க :* (விண்மீன், காடு, காற்று, புதுமை)
அ) பழமைக்கு எதிரானது - எழுதுகோலில் பயன்படும்
ஆ) ஓரெழுத்தில் சோலை - இரண்டெழுத்தில் வனம்
21. *இருசொற்களையும் ஒரே தொடரில் அமைத்து எழுதுக:* அ)விடு - வீடு ஆ) கொடு - கோடு
22. *எதிர்மறையாக மாற்றுக:* அ) மீளாத்துயர் ஆ) அருகில் அமர்க

**V. பின்வரும் இரண்டு வினாக்களுக்கும் விடையளி:** 2×5=10

23. உணவு விடுதியொன்றில் வழங்கப்பட்ட உணவு தரமற்றதாகவும், விலை கூடுதலாகவும் இருந்தது குறித்து உரிய சான்றுகளுடன் உணவு பாதுகாப்பு ஆணையருக்கு கடிதம் எழுதுக.
24. தொலைக்காட்சி நிகழ்வுகளை பார்த்துக் கொண்டிருக்கும் தம்பி திறன்பேசியில் விளையாடிக் கொண்டிருக்கும் தங்கை, எப்போதும் சமூக ஊடகங்களில் இயங்கியபடி இருக்கும் நண்பன் இவர்கள் எந்நேரமும் நடப்புலகில் இருக்காமல் கற்பனை உலகில் மிதப்பவர்களாக இருக்கிறார்கள். இவர்களை நெறிப்படுத்தி நடைமுறை உலகில் செயல்பட வைக்க நீங்கள் செய்யும் முயற்சிகளை எழுதுக.

**VI. ஒரு பக்க அளவில் ஏதேனும் ஒன்றிற்கு விடையளி:** 1×8=8

25. ஒரு குழந்தையை தூக்கவும் கீழே விழுந்த ஒரு தேனீர்க் கோப்பையை எடுக்கவும் மென்பொருள் அக்கறை கொள்ளுமா? வெறும் வணிகத்துடன் நின்று விடுமா? இதனையொட்டி "செயற்கை நுண்ணறிவின் எதிர்கால வெளிப்பாடுகள் பற்றி ஒரு கட்டுரை எழுதுக. (அல்லது)
26. மனோன்மணீயம் சுந்தரனாரின் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலையும் பெருஞ்சித்திரனாரின் தமிழ் வாழ்த்தையும் ஒப்பிட்டு மேடைப்பேச்சு ஒன்றை உருவாக்குக.

Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593